# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். NC.906/F/2024 (SA.9576/F/2024)

திரு R. கணேசன் — மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்),
மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம் - 637 003. — பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 05.03.2024 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 02.04.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 10.04.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 19.07.2024 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 06.11.2024 |
| மனுதாரர் NC மனு தாக்கல் செய்த நாள் | 26.12.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு R. கணேசன் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு M. சண்முகம், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் என்பவருக்கு பதிலாக திரு K.R. செந்தில்குமார், காவல் துணைக் கண்காணிப்பாளர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு, நாமக்கல் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், குமாரப்பாளையம் காவல் நிலையத்தில் கடந்த 2018-ஆம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரையில் தன்மீது எத்தனை குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டது என்பது பற்றிய விவரம், தன்மீது பதிவு செய்யப்பட்ட CSR மற்றும் FIR ஆகியவற்றின் நகல்கள், தான் கொடுத்த புகாரில் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது அவ்வாறு பதிவு செய்யப்பட்ட CSR மற்றும் FIR எத்தனை போடப்பட்டது என்பது பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 5 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு (SA.9576/F/2024) 06.11.2024 அன்று காணொளி காட்சி வாயிலாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்வாணையத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

***“ 4. அன்றைய (06.11.2024) விசாரணையின் முடிவில், மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவலை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் ஆகியவற்றினை*** **இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு** ***உத்தரவிடப்பட்டிருந்தது”.***

4. இந்நிலையில், இவ்வாணையத்தால் 06.11.2024 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையை பொதுத் தகவல் அலுவலர் மதிக்கவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை உரிய காலத்திற்குள் தனக்கு வழங்கவில்லை எனவும் தெரிவித்து, மனுதாரர் 26.12.2024 தேதியிட்டு இவ்வாணையத்தில் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனு இன்று (16.04.2025) காணொளி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணையத்தின் ஆணைக்குட்பட்டு மனுதாரருக்கு ந.க.எண்.சி6/1658/23876/2024 RTI No.278/2024 நாள் 04.02.2025 தேதியிட்டு பதிவுத்தபாலின் வாயிலாக ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களையும் மற்றும் அத்தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டார் என்பதற்கான ஒப்புகைச்சீட்டின் நகலினையும் இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்பித்தார்.

6. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், இவ்வாணையத்தின் ஆணைக்குட்பட்டு தனக்கு உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்கப்படாமல் காலதாமதமாக தனக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

7. இன்றைய விசாரணையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரால், மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதி, மனுதாரரின் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

8. மேலும், **இவ்வாணையத்தின் ஆணைக்குட்பட்டு, மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்காத காரணத்தினால் நாமக்கல் மாவட்டம், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் / அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்படி நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் அதிகபட்சமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)-ஐ தண்டத்தொகையாக ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான எழுத்து பூர்வமான விளக்கத்தினை இவ்வாணைக் கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் அப்போதைய பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு நாமக்கல் மாவட்டம், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் / தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகிறது.**

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.NC.906/F/2024 (SA.9576/F/2024)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்),
மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம் - 637 003.

**<u>வழக்கு எண்.NC.906/F/2024 (SA.9576/F/2024)</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு R. கணேசன், த/பெ. இராமலிங்கம்,
எண்.22/134 A1, பெராந்தார்காடு,
குமாரபாளையம்,
நாமக்கல் மாவட்டம் - 638 183.

Copy to: File.
SNPS / 22.04.2025